# <u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.253/2014</u>** **தேதி.02.04.2025**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. மகாலட்சுமி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. பி.வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 02.04.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | விநாயகம் |
| த/பெ. | : | சண்முகம் |
| வயது | : | 68/2025 |
| தொழில் | : | விவசாயம் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | பூண்டி |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிபேட்டை |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

தாவா 35 வது இலக்க சொத்து வாதி கணேசன் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா 36,37 மற்றும் 38 வது இலக்க சொத்துக்களை வாதி கணேசன் அவரது தாயார் பெயரில் கிரையம் எழுதினாரா என்றால் சரியல்ல. என் அம்மா இறந்த தேதி ஞாபகம் இல்லை. 2003 ல் இறந்துவிட்டார். நான் குழந்தையாக இருந்தபோது என் அம்மா இறந்ததால் என்னுடைய அம்மா இறந்த தேதி தெரியவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் என் அம்மாவின் இறப்பு சான்றிதழ மற்றும் வாரிசு

சான்றிதழ் ஆகியவற்றை வாதிதான் தாக்கல் செய்தார் என்றும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு அதைப்பபற்றி தெரியாது. என் தாயார் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். என் அம்மா உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது மருத்துவ செலவுகளை வாதிதான் செலவுசெய்தார் என்றால் சரியல்ல. ஒரு ரூபாய் கூட வாதி செலவு செய்யவில்லை. என் அம்மாவின் மருத்துவ செலவு மற்றும் இறந்தபோது ஆன செலவுகளை வாதிதான் செலவு செய்தார் என்றும் வழக்கிற்காக நான் உண்மையை மறைத்து பொய்யாக ஒரு ரூபாய் கூட செலவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா இறந்தபோது நான் வேலையில்லாமல் இருந்ததால் நான் என் அம்மாவுக்கு எந்த செலவுகளையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா இறந்தபோது அந்த செலவுகளை வாதிதான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா இறந்தபோது வாதிக்கு 5 வயது, எனக்கு 3 வயது ஆகும். என் தாய், தந்தையின் ஈமச்சடங்குகளை யார் செய்தார் என்று என் உறவினர்களை அழைத்து விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீட்டான 31 மற்றும் 32 வாதி பாகம் கேட்கிறார் என்றால் சரிதான், ஆனால் அதில் வாதிக்கு பாகம் இல்லை. அந்த வீட்டை என் அம்மா பெயரில் நான் வாங்கி நான் வீடு கட்டியுள்ளேன். பவுண்ட் தெருவில் உள்ள தாவா 30 வது இலக்க சொத்து என் அம்மா பெயரில்தான் உள்ளது. அந்த சொத்தை நான்தான் என் அம்மா பெயரில் வாங்கினேன். 30 வது இலக்க சொத்தில் உள்ள வீட்டை நான்தான் கட்டினேனா என்றால் நான்தான் கட்டினேன். வழக்கிற்காக நான் வீடு கட்டியதாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 30 வது இலக்க சொத்தில் வீடு கட்டுவதற்கு வாதிதான் செங்கல், மணல் மற்றும் ஆர்வேர்ட்டு பொருட்களை என்னிடம் காட்டப்படும் பில் தேதிகளான

19.07.1991, 07.09.1991 ஆகிய தேதிகளில் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல அப்போது வாதி ஊரிலேயே இல்லை. 30 வது இலக்க சொத்தில் உள்ள வீட்டை நான் எப்போது கட்டினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வீட்டை கட்டும்போது எனக்கு வயது என்ன என்றால் எனக்கு தோராயமாக 30 இருக்கும். அந்த வீடு கட்டும்போது எனக்கு 15 வயதுதான் இருந்தது என்றால் சரியல்ல. 30 வது இலக்க சொத்தில் உள்ள வீட்டை எந்த வருமானத்தை வைத்து கட்டினேன் என்றால் துளசி என்பவருக்கு சொந்தமான நிலத்தை குத்தகைக்கு 14 வருடம் எடுத்து அந்த வருமானத்தில் நான் வீடு கட்டினேன். மேற்படி விவரத்தை நான் என்னுடைய எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் எதிர்வழக்குரையில் கூறாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் 33, 34, 36, 37 மற்றும் 38 இலக்க சொத்துக்களை வாங்குவதற்கு எனக்கு வருமானம் இருந்ததற்கு வருமான சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் எந்தவொரு ஆவணத்தையும் வழக்கறிஞரிடம் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு கொடுத்திருந்தால் என் வழக்கறிஞர் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. வாதி வேலை செய்துவந்தபோது எனக்கு வருமானம் வந்ததற்கு எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அப்போது நான் கருவாடு, மீன் விற்றேன். வெள்ளரி பழம் விற்றேன் அதன் மூலம் எனக்கு வருமானம் வந்தது. தாவா 31, 32, 33 மற்றும் 36 முதல் 38 இலக்க சொத்துக்கள் என் தாயார் பெயரில் இன்றுவரை உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் உள்ள வீடுகளுக்கு வீட்டு வரி, குழாய் வரிகளை நான்தான் செலுத்தி வருகிறேன். தாவா 31, 32, 33 மற்றும் 36 முதல் 38

இலக்க சொத்துக்களில் உள்ள நிலங்களில் சிட்டா மற்றும் பட்டா என் தாயார் பெயரில் உள்ளது ஆனால் நான்தான் அனுபவித்து வருகிறேன். பி.வா.சா.ஆ.1 ஆவணம் எதற்காக கடன் வைக்கப்பட்டது என்று சொன்னால் நிலம் வாங்குதற்காகவும், வீட்டுமனை வாங்குதற்காகவும் அடமானம் வைத்தேன். நான் என்னுடைய சொந்த கடனை அடைப்பதற்காக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை அடமானம் வைத்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கடன் வாங்குவகு குறித்து நான் எதிர்வழக்குறையில் குறிப்பிட்டு கூறிவில்லை என்றால் சரயில்ல. என் மனைவி பஞ்சாயத்து தேர்தலில் நிற்பதற்காகவும், என் பிள்ளைகளின் திருமண செலவிற்காகவும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை கண்டுள்ள சொத்தை அடமானம் வைத்தேன் என்றால் சரியல்ல. நான் 09.07.1974 ல் நான் பிறந்தேன் என்று வாதி கூறினார் என்று சொன்னால் இருக்கலாம். சாட்சி தற்போது நான் 72 ல் சொத்து வாங்கினேன் என்றும் நான் 74 ல் சொத்து வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 15 வயது வரை என் பாட்டியுடன் வள்ளிமலையில் இருந்துவந்தேன் என்றால் சரியல்ல. நான் 13 வயதுவரைதான் இருந்தேன். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் 14 வது பேராவில் கிருஷ்ணன் என்பவரிடமிருந்து நான் பாதி சொத்தை வாங்கினேன் என்று சொன்னால் சரிதான். நான் வாங்கி என் அம்மா பெயரில் எழுதினேன். அப்போது எனக்கு 15 வயதுதான் இருந்தது என்றும் வாதி சொத்தை வாங்கி அவரது பெயரில் வாங்கி எழுதினார் என்றால் சரியல்ல. தாவா 18 முதல் 38 வரையிலான சொத்துக்களை வாதி பணத்தை கொடுத்து கிரையம் பெற்று அவருடைய அம்மா பெயரில் வாங்கினார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை நான் 21 கடனுறுதிச்சீட்டுகளின் மூலம் கடன் வாங்கியதாக பொய்யாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 1 முதல் 38 வரையிலான சொத்துக்கள் வாதியின் கண்காணிப்பில்தான் உள்ளது என்றும் வாதியை தாவா சொத்தில் நான் அனுபதிப்பதில்லை என்று சொன்னால் என்னுடைய சொத்தில் நான் அனுமதிப்பதில்லை. நான் ஒப்பந்த வேலை செய்வதற்கு எந்த ஒரு ஆணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா 1 முதல் 38 இலக்க சொத்துக்களில் வாதிக்கும் பாதி பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு சொந்தம் கிடையாது. பூர்வீக சொத்தில் அவருக்கு பாகம் உள்ளது. பூர்வீக சொத்து என்று நான் எதை சொல்கிறேன் என்றால் என் சின்னம்மா பெயரிலிருந்து என் அப்பா பெயரில் வந்து என் அம்மா பெயரில் உள்ள சொத்துக்கள் ஆகும். அம்மா பெயரில் உள்ள அனைத்து சொத்துகளிலிலும் வாதிக்கு பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**